## புத்தளம் நகர சபை
## புத்தளம் மாவட்டம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்தோபர் 30 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு புத்தளம் நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் தேசியக் கடன் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய கடன் மீதி ரூபா. 231,962 இனால் கூடுதலாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்குரிய வீத வரி ரூபா. 24,999 குறைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(இ) 2016 ஆம் ஆண்டில் உள்ளூராட்சி நிறுவனங்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தலின் கீழ் 04 பாதைகளை அபிவிருத்தி செய்வதற்காக 2017 ஆம் ஆண்டில் கிடைக்கப் பெற்றிருந்த ரூபா. 3,366,011 கடன்பட்டோர் கணக்கில் பதியப்படுவதற்குப் பதிலாக மீளாய்வாண்டில் மூலதன உதவியாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டில் உற்பத்தி செய்யப்பட்ட ரூபா. 679,050 பெறுமதியான கொம்போஸ்ட் உரத் தொகையும், விற்பனை வருமானமும் மூலதன வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் போது அடுத்த வருடத்திற்காகக் கிடைக்கப் பெற்றிருந்த வீத வரி ரூபா. 1,334,313 முன்னர் கிடைக்கப்பெற்ற வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) ரூபா. 1,095,695 பெறுமதியான சபைக்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிடங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டினுள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 04 நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா. 73,400 மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2016 ஆம் ஆண்டிற்காகச் செலுத்தப்பட வேண்டிய கணக்காய்வுக் கட்டணம் ரூபா. 350,000 கூடுதலாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஐ) 2015 ஆம் ஆண்டில் நன்கொடையாகக் கிடைக்கப் பெற்றிருந்த CREW கப் வண்டியின் பெறுமதி ரூபா. 3,223,220 மீளாய்வாண்டில் திரண்ட நிதியிலும் வழங்குனர் கடன் கொடுத்தோரில் இருமுறையும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஒ) மீளாய்வாண்டிற்கான ரூபா. 288,672 ஓய்வூதியச் சம்பள ஒதுக்கீடு திரண்ட நிதிக்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஓ) சபைக்குச் சொந்தமான கடையொன்றினை வாடகைக்கு விடுவதன் மூலம் கிடைக்கப் பெற்றிருந்த முற்பணத் தொகையாகிய ரூபா. 350,000 திரண்ட நிதியில் வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஔ) நன்கொடையாக 2014 ஆம் ஆண்டு கிடைக்கப் பெற்றிருந்த நான்கு சில்லுகளைக் கொண்ட டிரக்டர் வண்டியின் பெறுமதி கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(ஃ) மீளாய்வாண்டில் நன்கொடையாக கிடைக்கப் பெற்றிருந்த இயந்திர உபகரணங்களின் பெறுமதி கணக்கிடப்பட்டு கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ஊழியர் கடன் மற்றும் அட்டவணையில் காணப்பட்ட மீதிகளுக்கு இடையே ரூபா 289,958 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 92,859,282 தொகையான நிலையான சொத்துக்கள் மற்றும் ரூபா 61,179,064 ஆன மூலதன ஈடுபாட்டிற்கு வருமானத்தில் பங்களிப்புக் கணக்கிற்கு இடையே ரூபா 31,680,218 ஆன வேறுபாடு காணப்பட்டது.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 254,999,174 தொகையான பெறவேண்டிய மீதிகளில் ரூபா 168,622,810 தொகை 03 ஆண்டுகளுக்கு மேற்பட்டதாக இருந்ததுடன், அதில் ரூபா 18,580,150 தொகை இனங்காணப்பட்ட முற்பணமாக காணப்பட்டது.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 108,608,450 தொகையான செலுத்த வேண்டிய மீதிகளில் ரூபா 83,660,640 தொகை 03 ஆண்டுகளுக்கு மேற்பட்டதாக காணப்பட்டது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக ரூபா 267,196,598 கூட்டுத்தொகையான 12 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தன.

**1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை**

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | | | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|---|---|
| | | | ரூபா | |
| (அ) | நகர சபை கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அதிகாரம்) | | | |
| | (i) | 33 ஆம் பிரிவு | | சபைக்கு சொந்தமான சொத்துக்களின் உரித்தை உறுதிப்படுத்த பதிவேடுகள் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| | (ii) | 178(1)(2) ஆம் பிரிவு | | மீளாய்வாண்டிற்காக வரைவு பாதீடொன்று மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. |
| | (iii) | 181(1) ஆம் பிரிவு | 44,040,433 | சபையினால் 1999 ஆம் ஆண்டு முதல் கணக்காய்வுக் கட்டணம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| | (i) | நி.பி 565(3)(4) மற்றும் (5) | 50,758,520 | முன்னைய ஆண்டுகளில் வைப்புக்கள் பேரேட்டு மீதிகளை முன்கொண்டு வராமல் இருந்ததுடன் பொது மாதிரி 71 இல் மாதாந்த வைப்பு பொழிப்பு தயாரிக்கப்பட்டி ருக்கவில்லை. |
| | (ii) | நி.பி 571 (2) | 23,885,055 | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 67,221,862 ஆக காணப்பட்டதுடன் அதற்கு ஒத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 19,894,172 ஆக இருந்தது.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 **மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | வருமான விடயம் | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | வீதவரி மற்றும் வரி | 24,733 | 24,185 | 7,949 | 95,561 | 21,486 | 24,288 | 7,053 | 87,831 |
| (ii) | வாடகை | 55,017 | 39,048 | 36,254 | 30,896 | 29,426 | 38,063 | 31,524 | 31,412 |
| (iii) | அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 910 | 1,032 | 1,032 | - | 2,050 | 917 | 917 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 91,628 | 112,592 | 76,504 | 150,438 | 122,042 | 76,124 | 68,515 | 85,710 |

குறிப்பு சேகரிக்கப்பட்ட வருமானத்தில் ஆண்டிற்காக பட்டியலிடப்பட்ட வருமானத்தில் சேகரித்தல் மற்றும் முன்னைய ஆண்டுகளின் நிலுவை வருமானத்தில் சேகரிக்கப்பட்ட அறவீடுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன

2.2.2 **வருமான சேகரிப்பின் செயலாற்றல்**

மீளாய்வாண்டிற்காக ரூபா 176,857,000 ஆலும் முன்னைய ஆண்டுகளில் நிலுவை வருமானம் ரூபா 204,953,000 ஆலும் மீளாய்வாண்டின் போது ரூபா 121,739,000 சேகரிக்கப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டின் இறுதியில் ரூபா 204,953,000 தொகையான நிலுவை வருமானம் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 276,895,000 ஆக இருந்தது.

2.2.3 **வீதவரி மற்றும் வரி**

மீளாய்வாண்டின் ஆரம்ப மீதி மற்றும் ஆண்டின் போது பட்டியல்களிலிருந்து ரூபா 112,016,000 அறவிடப்பட வேண்டிய வேண்டிய போதிலும் ரூபா 7,949,000 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை ரூபா 95,560,708 ஆக இருந்தமையால் வருமான சேகரிப்பில் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது.

2.2.4 **குத்தகை வாடகை**

சபைக்குச் சொந்தமான அதனங்களை குத்தகை வழங்கியதால் 2009 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து அறவிடப்பட வேண்டிய வாடகை ரூபா 19,453,493 தொகை தொடர்பாக விரிவான தகவல்கள் சபைக்கு சொந்தமான ஆவணங்களில் உறுதிப்படுத்தப்படாததன் காரணமாக அறவீடுகள் நிச்சியமற்ற நிலைமையில் காணப்பட்டது.

**2.2.5 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

வியாபார நிலையங்கள் தொடர்பாக 2017 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த வெளிக்கள கணிப்பீட்டு அறிக்கை மற்றும் வியாபார அனுமதிப்பத்திரக் கட்டண பதிவேட்டை பரிசோதித்த போது 197 வியாபார நிலையங்களுக்குரிய ரூபா 365,000 பட்டியலிடப்பட்டிருக்கவில்லை.

**2.2.6 ஏனைய வருமானம்**

நகர சபை அதிகாரப் பிரதேசத்தில் பொருத்தப்பட்டிருந்த விளம்பர பதாதைகள் தொடர்பாக கணிப்பீடு செய்து அறிவித்தல் பதாதை பதிவேடொன்று தயாரித்தல் மற்றும் நிலுவை கட்டணங்கள் அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.7 முத்திரைக் கட்டணங்கள்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட ரூபா 17,806,505 ஆன முத்திரைக் கட்டணங்களிலிருந்து 2013-2017 காலப்பகுதிக்குரியதாக அறவிடப்பட வேண்டிய ரூபா 2,988,207 ஆக இருந்தது.

**03. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

நகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரியின் பாதுகாப்பு மற்றும் மேம்படுத்தலுடன் தொடர்புடையதாகவுள்ள அனைத்து விடயங்களினதும் கட்டுப்பாடு மற்றும் நிர்வாகத்தில் சபை தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறுள்ளன.

**(அ) உப விதிகள்**

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 157 ஆம் ஆவது பிரிவின் கீழ் 15 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை உபவிதிகள் எதுவும் பிறப்பிக்கப்படாமல் இருந்ததுடன் மாகாண சபையால் விதிக்கப்பட்டிருந்த உறுப்புரைகள் பின்பற்றப்பட்டிருந்தன.

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

சபையால் விதிக்கப்பட்டிருந்த உப உறுப்புரைகளின் பிரகாரம் சபையினால் நிறைவேற்றப்பட்டிருந்த 17 செயற்பாடுகளுக்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) எதிர்பார்க்கப்பட்ட நிறைவு மட்டத்தை பெற்றுக்கொள்ளாமை**

அபிவிருத்தி திட்டத்திலான 18 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக ரூபா 11,915,000 ஆன நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் எதிர்பார்க்கப்பட்ட நிறைவு மட்டத்தை பெற்றுக்கொண்டிருக்கவில்லை.

**(ஈ) திண்மக்கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

-------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம் நிலையத்தின் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பதவியணியின் 10 பேருக்கு ரூபா 38 இலட்சம் அளவில் சம்பளமாக கொடுப்பனவு செய்யப்பட்டிஎருந்ததுடன் நாளொன்றுக்கு சேகரிக்கப்படும் 17 டிராக்டர் கழிவுகளில் கழிவுப் பொருள் முகாமைத்துவம் நிலையத்திற்கு 04 டிராக்டர் அளவில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. எஞ்சிய கழிவுப்பொருட்கள் கொம்போஸ்ட் பிரிவிற்கு அண்மையில் திறந்த வெளியில் இடப்பட்டு வந்தது.

(ii) சபை அதிகாரப் பிரதேசத்தில் ஒதுக்கி (வகைப்படுத்தப்பட்டு) பெற்றுக்கொள்ளப்படாதிருந்ததுடன் கொம்போஸ்ட் பிரிவினுள் அக்கழிவுப்பொருள் வேறாக்கல் தொழிலாளர்களால் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

**(உ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்**

-------------------------------------------------------------------------

நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரலின் கீழ் வறுமையை குறைத்தல், சுற்றாடல் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்கள், வலது குறைந்த நபர்களை பலப்படுத்துதல் மற்றும் சமூக சமாதானத்தை ஏற்படுத்துதல் என்ற வகையிலான நோக்கங்களுடன் இலக்குகள் இணங்காணப்பட்டிருக்கவில்லை. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்வது தொடர்பாக அக்கரையுடைய தரப்பினர் இனங்காணப்பட்டிருந்த போதிலும் அத்தரப்பினரை அறிவூட்டும் வேலைத் திட்டமொன்று செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

-----------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கொழும்பு புத்தளம் பிரதான பாதையில் அமைந்துள்ள சபைக்குச் சொந்தமான இரண்டு கடைகள் தொடர்பில் வாடகை ஒப்பந்தத்திற்கு முரணாக ஒப்பந்தக்காரரினால் வீதியின் பாதுகாப்புப் பிரதேசத்தையும் பயன்படுத்தி கீழ் மாடியுடன் இணைந்ததாக மேலும் 03 மாடிகளுடன் கூடிய கட்டிடமொன்று அமைக்கப்பட்டிருந்ததுடன், ஒப்பந்தத்திற்கமைவாகவும் நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (225 அதிகாரத்தின்) 84(1) பிரிவின் பிரகாரம் சபை நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

(ஆ) தும்பு உற்பத்தித் திட்டமொன்றிற்குச் சொந்தமான ரூபா. 3,668,606 பெறுமதியான ஆதனங்கள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் 2014 ஜுன் 03 ஆம் திகதி சபைக்குக் கையளிக்கப்பட்டிருந்தது. இச் சொத்துக்களின் மூலம் எதுவித வருமானத்தையும் ஈட்டுவதற்கான நடவடிக்கையையும் சபை எடுக்காதிருந்ததுடன், சொத்துக்களின் பாதுகாப்பு சம்பந்தமான எந்தவித நடவடிக்கையையும் செயற்படுத்தாதிருந்ததன் காரணமாக இயந்திரங்களுக்குப் பொருத்தப்பட்டிருந்த 06 மின் மோட்டார்கள் திருடர்களால் கொண்டு செல்லப்பட்டிருந்தன.

(இ) சபையின் வேலை மற்றும் சுகாதாரப் பிரிவில் சுமார் 130 ஊழியர்கள் கடமையில் ஈடுபட்டிருந்த போதிலும், அவர்களது வருகை மற்றும் வெளியேறுதலை முறையாக உறுதிப்படுத்திக் கொள்வதற்கான நேரப் பதிவு இயந்திரங்கள் பொருத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.3 மனித வள முகாமைத்துவம்

(அ) **ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகை**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் நிறைவேற்று, இரண்டாம், மூன்றாம் மற்றும் ஆரம்ப தர பதவிகளில் முறையே 02,32,03 மற்றும் 01 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் நிரந்தர பதவியணியினருக்கு அனுமதிக்கப்படாத 04 பதவிகளில் மிகையொன்று காணப்பட்டது.

**(ஆ) ஊழியர் கடன்**

இடமாற்றம பெற்று அல்லது ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து பெறவேண்டிய ரூபா 227,613 ஆன மீதி அறவிடப்பட வேண்டிய தரப்பினர் இனங்காணப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 சொத்துக்களை பதிவேடுகளுக்கு உட்படுத்தப்படாமை

சபைக்குச் சொந்தமான 02 கெப் வண்டிகள், 02 உழவு இயந்திரங்கள், பெக்கோ லோடர், கலி பவுசர், நீர் பவுசர் மற்றும் பவுசர் டேலர் தொடர்பான விபரங்கள் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

#### 3.4.2 கையேற்கப்படாத சொத்துக்கள்

பொது நிர்வாக அமைச்சினதும் உள்ளூராட்சி மன்ற மற்றும் மாகாண சபைகள் அமைச்சிடமிருந்து கிடைக்கப்பெற்ற 04 வாகனங்களின் உரித்து சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 பெறுகைகள்

#### 3.5.1 பெறுகைகள் திட்டம்

அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.1 ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 3.5.2 ஒப்பந்தப் நிர்வாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) கொம்போஸ்ட் திட்டக் கட்டிட நிர்மாணத்தின் முதலாம் கட்ட செலவின அறிக்கையில் 05 செலவுத் விடயங்களுடன் தொடர்பான ரூபா. 148,334 கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) புத்தளம் ஹாமீன் பாதை கொங்கிரீட் இடும் போது 122.5 மீற்றர்களுக்கான கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் அது மீற்றர் 119.9 ஆகக் காணப்பட்டதன் காரணமாக ரூபா. 28,650 கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) புத்தளம் பொலிஸ் வீதி 03 ஆம் ஒழுங்கை கொங்ரீட் இடும் போது 02 மீற்றர் நீளம் குறைவாக இடப்பட்டிருந்ததன் காரணமாக ரூபா. 29,690 கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) வெளிச் சுற்றுப் பாதை 06 ஆவது ஒழுங்கை வடிகாண் நிர்மாணிப்பு வேலைகள் திருப்தியற்ற முறையில் முடிக்கப்பட்டிருந்ததனால் ரூபா. 345,650 இற்கான கொடுப்பனவு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. சபையில் வேலை அதிகாரியொருவர் மற்றும் தொழில்நுட்ப அதிகாரிகள் இருவர் கடமையாற்றிய பொழுதும் இந் நிர்மாணம் தொடர்பான எந்தவித மேற்பார்வையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் 38 செலவின விடயங்களில் ரூபா 11,095,000 தொகையான மொத்த நிதி ஏற்பாடுகளும் சேமிக்கப்பட்டு அல்லது வேறு செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தன.

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களை செயற்படுத்துதல்

மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 05. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | | குறைபாடுகள் | |
|---|---|---|---|
| (அ) | கடன்பட்டோர்/ கடன் கொடுத்தோர் கட்டுப்பாடு | (i) | பழைய கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| | | (ii) | கட்டுப்பாட்டுக் கணக்குகள் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | சொத்துக்கள் முகாமைத்துவம் | (i) | நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்படாமை |
| | | (ii) | சில சொத்துக்கள் கணக்கீடு செய்யப்படாமை |
| | | (iii) | பாதுகாப்பு தொடர்பான போதியளவு நடவடிக்கை எடுக்கப்படாமை |
| (இ) | ஊழியர் முகாமைத்துவம் | (i) | வெற்றிடங்கள் நிரப்பப்படாமை |
| | | (ii) | ஊழியர் கடன் மீதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படாமை |
| (இ) | வருமானம் நிர்வாகம் | | வீதவரி, கடை வாடகை சேகரிப்பு மிகவும் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டமை |